DEPOSITION OF WITNESS
IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE,
VELLORE @ RANIPET.

**SC No.: 239 / 2009**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | Pw17 |
| Name | : | கோமதி |
| Father's / Husband's Name | : | அன்பழகன் |
| Age | : | 50 |
| Religion | : | இந்து |
| Calling | : | -- |
| Caste | : | SC |
| Village | : | நவல்பூர் |
| Date | : | 11.03.2019. |

சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டது.

முதல் விசாரணை:

நான் தற்போது நெ.38, பி1 வி.எம். தெரு, நவல்பூர் இராணிப்பேட்டை என்ற முகவரியில் வசித்து வருகிறேன். இராணிப்பேட்டை நவல்பூரில் 1999 ஆம் ஆண்டில் நானும் என்னுடைய கணவரும் நிலம் வாங்க முடிவுசெய்தோம். வாலாஜாவை சேர்ந்த சுந்திர மூர்த்தி என்பவரிடம் பத்திரம் பதிவுசெய்வதற்காகவும் பதிவு செய்த பத்திரத்தை திரும்பி வாங்குவதற்காகவும் அவரை அனுகினோம். பதிவு செய்த பத்திரம் வருவதற்கு காலதாமதமாகும் என்று சொன்னார். பிறகு போலிஸார் என்னை விசாரணை செய்யும்போது அது போலி பத்திரம் என்று எனக்கு தெரியவந்தது. சி.பி.சி.ஐ.டி. போலிஸார் என்னை விசாரணை செய்தார்கள்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:

என்னுடைய கணவரின் பெயரில் இடம் வாங்கினோம். பத்திர பதிவின்போது நான் நவல்பூரில் வாடகை வீட்டில் இருந்தேன். பதிவு செய்த பத்திரத்தை சுந்திர மூர்த்தியிடம்தான் சென்று கேட்டோம். சி.பி.ஐ.டி போலிஸார் என்னை என்னுடைய வீட்டில்தான் விசாரித்தார்கள். போலிஸார் என்னை விசாரிக்கவில்லை என்றும் போலிஸார் கேட்டுக் கொண்டதன் பேரில் நான் தற்போது நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE,
VELLORE @ RANIPET.

**SC No.: 239 / 2009**

| | | |
|---|---|---|
| Deposition of witness for | : | Pw18 |
| Name | : | ஜானகி |
| Father's / Husband's Name | : | சுந்திர மூர்த்தி |
| Age | : | 62 |
| Religion | : | இந்து |
| Calling | : | -- |
| Caste | : | BC |
| Village | : | வாலாஜா |
| Date | : | 11.03.2019. |

சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டது.

முதல் விசாரணை:

நான் தற்போது நெ.19, திருவள்ளுவர் நகர் வாலாஜாவில் வசித்து வருகிறேன். கடந்த 2001 ஆம் ஆண்டில் போலிஸார் பத்திரம் உள்ளதா என்று என்னுடைய வீட்டில் சோதனை செய்தார்கள். என்னுடைய கணவரை பற்றி கேட்டார்கள் அப்போது அவர் திருத்தனி சென்றிருந்தார். போலிஸார் என்னை விசாரணை செய்தார்கள். அப்போழுது வீட்டை சோதனை செய்ததற்காக நான் கையெழுத்து போட்டேன்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:

என்னுடைய கணவர் மற்றும் என்னுடைய மகன் பத்திரம் எழுதும் தொழில் செய்து வந்தார்கள் என்றால் சரிதான். போலிஸார் என்னுடைய வீட்டில் கையெழுத்து வாங்கினார்கள். அந்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. கையெழுத்து போட சொன்னார்கள், நான் கையெழுத்து போட்டேன். போலிஸார் என்னுடைய கணவரை பற்றி விசாரணை செய்தார்கள். அந்த சமயத்தில் என்னுடைய கணவர் திருத்தனி சென்றிருந்தார். சோதனை செய்ததற்குதான் கையெழுத்து வாங்கினார்கள். போலிஸார் கையெழுத்து போடசொன்னதால்தான் நான் கையெழுத்து போட்டேன்.